## டிசம்பர் – 26 – கிறிஸ்து பிறப்பு வார புதன்

### புனித இஸ்தோவான் (முடியப்பர்) - முதலாவது மறைசாட்சி

### என் கற்பாறையும் கோட்டையும் நீரே, திபா. 31:3

---

### முதல் வாசகம் : திருத் தூதர் பணி 6:8–10, 7:54-59

அக்காலத்தில் இஸ்தேவான் அருளும், வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையே பெரும் அருஞ்செயல்களையும் அரும் அடையாளங்களையும் செய்து வந்தார். அப்பொழுது உரிமையடைந்தோர் எனப்படுவோரின் தொழுகைக்கூடத்தைச் சேர்ந்த சிலரும் சிரேன், அலக்சாந்திரியா நகரினரும் சிலிசியா, ஆசியா மாநிலத்தவரும் ஸ்தேவனோடு வாதாடத் தொடங்கினர். ஆனால் அவரது ஞானத்தையும் தூய ஆவி வாயிலாக அவர் பேசிய வார்த்தைகளையும் எதிர்த்து நிற்க அவர்களால் இயலவில்லை. இவற்றைக் கேட்டவர்கள் உள்ளம் கொதித்தெழுந்து அவரைப் பார்த்துப் பற்களை நறநறவெனக் கடித்தார்கள். அவரோ தூய ஆவியின் வல்லமையை நிறைவாய்ப் பெற்று, வானத்தை உற்று நோக்கினார். அப்போது கடவுளின் மாட்சியையும் அவர் வலப்பக்கத்தில் இயேசு நிற்பதையும் கண்டு,
”இதோ, வானம் திறந்திருப்பதையும், மானிட மகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்” என்று கூறினார். ஆனால் அவர்கள் தங்கள் செவிகளை அடைத்துக் கொண்டு பெருங் கூச்சலிட்டு ஒருமிக்க அவர்மேல் பாய்ந்தார்கள். நகரத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டு போய் அவர்மேல் கல்லெறிந்தார்கள். சாட்சிகள் தங்கள் மேலுடைகளைச் சவுல் எனும் இளைஞரிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் ஸ்தேவான்மீது கல்லெறிந்தபோது அவர், ”ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்” என்று வேண்டிக் கொண்டார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்.

### நற்செய்தி : மத்தேயு 10 : 17 - 22

எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் மனிதர்கள் உங்களை யூதச் சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக்கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என்பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள். இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும்பொழுது, ”என்ன பேசுவது, எப்படிப் பேசுவது” என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார். சகோதரர் சகோதரிகள் தம் உடன் சகோதரர் சகோதரிகளையும் தந்தையர் பிள்ளைகளையும் கொல்வதற்கென ஒப்புவிப்பார்கள். பிள்ளைகள் பெற்றோர்க்கு எதிராக எழுந்து அவர்களைக் கொல்வார்கள். என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இயேசுவைப் பின்தொடர்ந்தால் வருகின்ற துன்பங்களைக்குறித்து, இயேசு முதலில் எச்சரிக்கின்றார். தன்னைப்பின்தொடர்ந்தால், புகழும், பெயரும் கிடைக்கும் என்று ஏமாந்து விடக்கூடாது என்பதை தனது சீடர்களுக்கு இயேசு தெளிவுபடுத்துகின்றார். ஏனென்றால சீடர்கள் தங்களுக்குள்ளாக யார் பெரியவர் ? என்று சண்டையிட்டுக் கொள்வதை இயேசு நிட்சயமாக விரும்பவில்லை. இயேசுவைப் பின்தொடர்கின்ற போது அடிப்படையிலே மற்றவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, ஒரு சவாலான வாழ்வு வாழ வேண்டும் என்பதும் இயேசுவின் அழைப்பு. தாங்கள் சார்ந்திருக்கின்ற சமயத்திலிருந்து எதிர்ப்பு வருவதை இயேசு சொல்கின்றார் சமயம் என்பது யூதர்களுக்கு தங்களது உயிரை விட மேலான ஒன்று. யூதர்களின் அடையாளமே சடங்குகளும் சம்பிரதாயங்களும்தான். அப்படிப்பட்ட சமயத்திலிருந்து இயேசுவைப் பின்தொடர்கின்றவர்கள் பிரிக்கப்படுவார்கள். நாம் இயேசுவைப் பின்தொடர வேண்டுமென்றால் அது எளிதான காரியம் அல்ல. ஆனால் அது முடியாததும் அல்ல. மன உறுதி நமக்கு வேண்டும், அப்படி மன உறுதியோடு நாம் இருந்தால், நிட்சயமாக இயேசுவைப் பின் தொடர முடியும். அப்படி பின் தொடர்ந்தவர் தான் முதல் மறைசாட்சியான புனித ஸ்தேவான். இயேசுவுக்காக தன் உயிரையும் கையளித்து மறை சாட்சிகளின் வரலாற்றில் முதல் இடம் பெற்ற பெருமையை அடைந்தவர் புனித ஸ்தேவான். அவரது இறப்பு இயேசுவின் இறப்பைப் போலவே இறைவனின் மன்னிப்பை வேண்டுவதாக அமைந்திருக்கிறது. வாழ்வில் மட்டுமல்ல , சாவிலும் நாம் இயேசுவைப் பின்பற்ற வேண்டும் என்பதற்கு ஸ்தேவான் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார். கிறிஸ்து பிறப்பு விழாவின் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் நாம் நம்முடைய வாழ்வு எப்போதும் ஆண்டவருக்கு சான்று பகர்வதாக அமைய வேண்டும் என்பதை நினைவில் கொள்வோம். எல்லாச்சூழ் நிலைகளிலும் எல்லா வேளைகளிலும் நமது வாழ்வு இறைவார்த்தையின்படி இறைதிருவுளத்தின் படி அமைந்தால், அதுவே நமது சாட்சிய வாழ்வு. கிறிஸ்மஸ் விழாவின் மகிழ்ச்சியிலும் கொண்டாட்டத்திலும் கூட நாம் இயேசுவுக்கு சாட்சிகளாய் வாழ வேண்டும். நமது சொற்களும், கொண்டாட்டங்களும் இறைவனுக்குப் பிரியமானதாய் அமையட்டும்.